# FORUM OF BSNL UNIONS AND ASSOCLATIONS
# TAMILNADU CIRCLE

தேதி:29.05.2012.

## கால வரையற்ற வேலை நிறுத்தம்

அன்பார்ந்த தோழர்களே!

BSNLல் இணைந்து அதன் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபடும் ஊழியர்களும் அதிகாரிகளும் ஒரு சில பொருளாதார கோரிக்கைகளை வைக்கும் போதும் பறிக்கப்பட்ட சலுகைகளை திரும்ப தரவேண்டும் என கோரிக்கை வைக்கும் போதும் BSNLன் நிதி நிலையை காட்டி மறுத்து வரும் நமது BSNL நிர்வாகம் 25.05.2012 அன்று ஒரு உத்தரவை பிறப்பித்து உள்ளது. அதில் மேல் மட்ட நிர்வாகத்தின் முழு ஆதரவோடு BSNLல் இணைய மறுத்து வரும் ITS அதிகாரிகளுக்கு 6ஆவது ஊதியக் குழு பரிந்துரைத்த 15 படிகளை (அலவன்ஸ்களை) வாரி வழங்கி உள்ளது. இதனால் பல கோடி ரூபாய்கள் BSNLக்கு கூடுதல் செலவினம் ஏற்படும். BSNLல் இணைய மறுப்பவர்களுக்கு வாரி வழங்கும் நிர்வாகம் BSNLல் இணைந்து அதன் வளர்ச்சிக்காக பாடுபடும் ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நியாயமாக வழங்க வேண்டியதை மறுப்பதற்கு எந்த விதமான நியாயமும் இல்லை. எனவே 28.05.2012 அன்று மாலை 03.00 மணியளவில் கூடிய BSNLல் உள்ள அனைத்து சங்கங்களின் அவசரக் கூட்ட்த்தில் கீழ்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இயக்கங்களை நடத்த முடிவு செய்துள்ளது.

## ***<u>கோரிக்கைகள்</u>***

1) BSNLல் உள்ள அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் 78.2% பஞ்சப்படி இணைப்பை உடனடியாக அமுல் படுத்து.

2) நிறுத்தி வைக்கப்பட்டுள்ள LTC, மருத்துவ அலவன்ஸ், விடுமுறையை காசாக்கும் வசதியை திரும்ப வழங்கு.

3) போனஸை (PLI) உடனடியாக வழங்கு.

4) பெர்க்ஸ்களை உடனடியாக மாற்றி அமைத்திடு.

5) நிலுவையிலுள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் அனைத்து பொருளாதார கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்று.

# இயக்கங்கள்

31.05.2012- நாடு தழுவிய ஆர்ப்பாட்டங்கள். கார்ப்பரேட் அலுவலகம் முன்பு ஒரு நாள் தர்ணா.

06.06.2012-நாடு முழுவதும் ஒரு நாள் தர்ணா.

13.06.2012-முதல் கால வரையற்ற வேலை நிறுத்தம்

அனைத்து மட்டங்களிலும் அனைத்து தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து இயக்கங்களை வெற்றிகரமாக்கிட தேவையான அனைத்து முயற்சிகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

நியாயமான உரிமைகளை பெற ஒன்று பட்டு போராடுவோம்! வெற்றி பெறுவோம்!!

(அனைத்து சங்கங்களின் முந்தைய இயக்கங்கள் இந்த போராட்டங்களின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளன)

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள

| | | |
|---|---|---|
| மாநில செயலாளர். BSNLEU | மாநில செயலாளர். NFTE | மாநில செயலாளர். SNEA (I) |
| மாநில செயலாளர். AIBSNLEA | மாநில செயலாளர். TEPU | மாநில செயலாளர். SEWA BSNL |
| மாநில செயலாளர். BSNLWRU | மாநில செயலாளர். ATM | |